வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA
PORT-LED PROSPERITY
Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Global Connect
Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

**Press Release No:31** **Date: 31.01.2026**

**V.O. Chidambaranar Port Authority showcases leadership in clean energy initiatives at India Energy Week 2026**

V.O. Chidambaranar Port Authority, Tuticorin, marked a significant presence at India Energy Week 2026, held from 27-30 January 2026 in Goa, under the patronage of the Ministry of Petroleum and Natural Gas, reaffirming its commitment to India’s clean energy transition and sustainable infrastructure development.

On the sidelines of India Energy Week 2026, V.O. Chidambaranar Port Authority signed a Memorandum of Understanding (MoU) with Oriana Power Limited, Uttar Pradesh, to explore potential collaboration on sustainable energy initiatives. The MoU focuses on the development and deployment of a Carbon Capture, Utilization, and Storage (CCUS) pilot project, as well as the establishment of a Green Methanol production facility, including associated infrastructure and logistics, at or in association with the port. The initiative aims to advance the Port’s carbon neutrality goals and readiness for green methanol bunkering and export-oriented green hydrogen infrastructure.

The MoU was signed in the presence of Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson, V.O. Chidambaranar Port Authority, by Shri A. Senthil Ganesh, Executive Engineer, V.O. Chidambaranar Port Authority, along with Shri Omkar Nath, GH2 Business Head, and Mr. Anirudh Saraswat, Co-Founder, Director & Chief Business Officer, representing Oriana Power Limited.

In another significant step towards sustainability and environmental management, V.O. Chidambaranar Port Authority signed an Tripartite MoU with Thoothukudi City Municipal Corporation and Universal Cleantech Solutions Private Limited for the development of Municipal Solid Waste (MSW) processing facility at the Port. The facility will focus on the production of green methanol from municipal solid waste, supporting the Port’s commitment to clean energy and circular economy initiatives. This project will address the difficulties in waste handling and paves way towards sustainability. This MoU was signed in the presence of Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson, V.O. Chidambaranar Port Authority, by Shri A. Senthil Ganesh, Executive Engineer, V.O. Chidambaranar Port Authority, Shri Binu Mohan, General Manager, Universal Cleantech Solutions Private Limited, and Smt. S. Priyanka, IAS, Commissioner, Thoothukudi City Municipal Corporation.

On Day 3 of India Energy Week 2026, Shri Susanta Kumar Purohit, IRSEEE, Chairperson, V.O. Chidambaranar Port Authority, participated as a panelist in the session titled “Delivering Viksit Bharat’s vision for energy growth: The critical role of railways and shipping in facilitating India’s future energy supply chain.”Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson, highlighted that VOC Port is all set to provide green methanol facility to the shipping lines that are hedging across fuel pathways.

Supported by India’s emerging green hydrogen ecosystem, established ammonia-handling experience, strategic location close to major East–West trade routes, and outer harbour expansion with dedicated green-fuel infrastructure, VOC Port is evolving from a conventional logistics node into an orchestrator of a green energy ecosystem, with Pilot methanol bunkering targeted in the near term and focused to ramp up in commercial scale and establishing green corridors thereafter.

These initiatives reflect V.O. Chidambaranar Port Authority’s proactive role in advancing green energy solutions, sustainable waste management, and infrastructure aligned with the Hon’ble Prime Minister’s vision of Viksit Bharat, strengthening India’s energy and logistics value chain.

The above details were released in the Press Release by V.O.Chidambaranar Port Authority today.

Public Relations Officer

SAGARMALA
PORT-LED PROSPERITY

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

Global Connect
Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

பத்திரிக்கை செய்தி : 31 நாள்: 31.01.2026

**வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இந்தியா எரிசக்தி வாரம் 2026 நிகழ்வில் சுத்தமான எரிசக்தி முன்னெடுப்புகளில் முன்னணி வகித்தது**

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் ஜனவரி 27-30 ஆம் தேதிகளில் கோவாவில் நடைபெற்ற இந்தியா எரிசக்தி வாரம் 2026 நிகழ்வில் முக்கிய முன்னிலையில் கலந்து கொண்டு, இந்தியாவின் சுத்தமான எரிசக்தி மாற்றம் மற்றும் நிலைத்துவான கட்டமைப்பு வளர்ச்சிக்கான தனது உறுதியை மீண்டும் உறுதிப்படுத்தியது. இந்த நிகழ்வு பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் ஆதரவுடன் நடைபெற்றது.

இந்நிகழ்வில், வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம், உத்தரபிரதேசத்தைச் சார்ந்த ஓரியானா பவர் லிமிடெட்டுடன் (Oriana Power Limited) நிலைத்த எரிசக்தி முன்னெடுப்புகளில் ஒத்துழைப்பு செய்யும் நோக்கில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தம் கார்பன் பிடிப்பு, பயன்பாடு மற்றும் சேமிப்பு பைலட் திட்டம் அமைத்தல் மற்றும் துறைமுகம் அல்லது துறைமுகம் தொடர்புடைய இடங்களில் பச்சை மெத்தனால் உற்பத்தி நிலையம், அதனுடன் தொடர்புடைய கட்டமைப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அமைந்துள்ளது. இந்த முன்முயற்சி துறைமுகத்தின் கார்பன் நடுநிலைமை இலக்குகளை முன்னெடுக்கவும், பச்சை மெத்தனால் சேமிப்பு மற்றும் வர்த்தக ஏற்றுமதிக்கான பச்சை ஹைட்ரஜன் கட்டமைப்புக்கான தயாரிப்பில் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

இந்த ஒப்பந்த கையெழுத்து நிகழ்வு, திரு திரு.சுசாந்த குமார் புரோஹித் இ.ர.ப.மி.பொ., வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத்தின் தலைவர் முன்னிலையில், திரு எ. செந்தில் கணேஷ், நிர்வாக பொறியாளர், வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் மற்றும் ஓரியானா பவர் லிமிடெட் சார்பாக திரு ஓம்கார் நாத், GH2 வர்த்தகத் தலைவர் மற்றும் திரு அனிருத் சரஸ்வத், இணை நிறுவனர், நிர்வாகி மற்றும் வர்த்தக அதிகாரி ஆகியோர் கையெழுத்திட்டனர்.

சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் நிலைத்தன்மை நோக்கத்தின் மற்றொரு முக்கிய முன்னெடுப்பாக, வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம், தூத்துக்குடி மாநகராட்சி மற்றும் யுனிவர்சல் கிளீன்டெக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (Universal Cleantech Solutions Private Limited) ஆகியோருடன் முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் துறைமுகத்தில் நகராட்சி திடக் கழிவு செயலாக்க நிலையத்தை உருவாக்குதல் ஆகும். இந்த நிலையம் நகரச் சுழற்சி கழிவிலிருந்து பச்சை மெத்தனாலை உற்பத்தியை செய்யும் நோக்கத்தில் அமைக்கப்படும்.

இந்த ஒப்பந்த கையெழுத்து நிகழ்வு திரு சுசந்த குமார் புரோஹித், இ.ர.ப.மி.பொ., வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத்தின் தலைவர் முன்னிலையில், திரு. செந்தில் கணேஷ், நிர்வாக பொறியாளர் வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம், திரு. பினு மோகன், பொது நிர்வாகி, யுனிவர்சல் கிளீன்டெக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (Universal Cleantech Solutions Private Limited) மற்றும் திருமதி எஸ். பிரியங்கா, இ.அ.ப., தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர். ஆகியோரால் கையெழுத்திடப்பட்டது.

இந்தியாவின் எரிசக்தி வாரம் 2026 நிகழ்வின் 3-ம் நாள் திரு. சுசாந்த குமார் புரோஹித், இ.ர.ப.மி.பொ., வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணைய தலைவர் அவர்கள் விக்சித் பாரத் (Viksit Bharat) என்ற கனவிற்கான எரிசக்தி வளர்ச்சியை நிறைவேற்றுதல்: இந்தியாவின் எதிர்கால எரிசக்தி வழங்குதலின் தொடர் சங்கலியை எளிதாக்க இரயில்வே மற்றும் கப்பல் போக்குவரத்தின் முக்கிய பங்கு என்ற தலைப்பிலான கலந்துரையாடலின் அமர்வில், குழு விவாத உறுப்பினராக (Panelist) பங்கேற்றார். இந்த அமர்வின் போது, திரு. சுசாந்த குமார் புரோஹித், இ.ர.ப.மி.பொ., வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணைய தலைவர் அவர்கள் பல்வேறு எரிபொருள் வழித்தடங்களில் (fuel pathways) மாற்றத்தை மேற்கொண்டு வரும் கப்பல் சேவை நிறுவனங்களுக்கு, பசுமை மெத்தனால் வசதிகளை வழங்குவதற்கு வ.உ.சிதம்பரனார் துறைமுகம் முழுமையாக தயாராக உள்ளது என்பதை விரிவாக எடுத்துரைத்தார்கள்.

இந்தியாவின் வளர்ந்து வரும் பசுமை ஹைட்ரஜன் சூழல் அமைப்பின் ஒத்துழைப்புடன், அமோனியா கையாளுதலில் பெற்றுள்ள அனுபவம், முக்கிய கிழக்கு மேற்கு கடல் வர்த்தக தளவாடத்தின் அருகாமையிலுள்ள முக்கிய இடமாக இருப்பதோடு, பசுமை எரிபொருளுக்கான தனிப்பட்ட உட்கட்டமைப்புடன் வெளித் துறைமுகம் அமையவுள்ளதன் மூலம் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் சிறந்த சரக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தளவாட மையமாகத் திகழும் என்றார். குறுகிய காலத்தில் பைலட் மெத்தனால் பங்கரிங் (Pilot Methanol Bunkering) தொடங்க இலக்கு நிர்ணயிக்கபட்டுள்ளதுடன், அதை வணிக அளவிற்கு படிப்படியாக விரிவுப்படுத்தி, அதன் பின்னர் பசுமை வழித்தடங்களை (Green Corridors) உருவாக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட உள்ளது என்று கூறினார்.

இந்த முயற்சிகள், பசுமை ஆற்றல் தீர்வுகள், நிலைத்த கழிவு மேலாண்மை மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு ஆகிய துறைகளில் வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத்தின் முனைப்பான பங்களிப்பை வெளிப்படுத்துகின்றன. மேலும் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் விக்சத் பாரத் (Viksit Bharat) என்ற கனவுடன் இணைந்து, இந்தியாவின் ஆற்றல் மற்றும் தளவாட மதிப்புச் சங்கிலியை மேலும் வலுப்படுத்துகின்றது.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி